புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 40. TML1179 - சங்ககால மகளிரின் பல்திறப் பதிவுகள்

முனைவர் ஜெ.ஜெயசித்ரா MA.,M.Phil.,B.Ed.,Ph.D.,NET
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தூயநெஞ்சக்கல்லூரி, திருப்பத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதகுல வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டது சங்க இலக்கியம்.இவை இலக்கியங்களின் மணிமகுடம்.வாழ்வியல் என்பது அகமும்,புறமும் இரண்டறக் கலந்தது.முறையே ஆண் பெண் எனும் இருவரின் எண்ணங்களும் இணைவதுதான் வாழ்க்கை.அவ்வாறான வாழ்க்கையில் சங்க காலத்தில் பெண்களின் நிலை சுதந்திரமாகவும் மதிப்பிற்குரியதாகவும் இருந்துள்ளது.தற்காலப் பெண்களை உற்று நோக்குகின்ற பொழுது பெரிய அளவில் வேறுபாடொன்றும் இல்லை. இக்காலப் பெண்களைப் போலவே சங்காலப் பெண்களுக்கு அதிக அளவு உரிமைகளும் சுதந்திரங்களும் தரப்பட்டுள்ளது.இச்சூழலை அக்காலப் பெண்களும் மிகச்சரியான முறையில் பயன்படுத்தி எதார்த்தமாகவும், திறமை மிக்கவர்களாகவும் செயல்பட்டுள்ளார்கள் சங்கப் மக்கள். அதனால் தான் சங்க காலத்தை பொற்கலம் என்று குறிப்பிடுகின்றோம்.இப் பொற்காலத்தில் மகளிரின் பங்களிப்பு அளப்பரியது.காரணம், சங்க இலக்கியங்களில் காணலாகும் பெண்கள் தலைவியாக, தோழியாக, நற்றாயாக, செவிலியாக, விறலியாக, ஆடுகள மகளிராக, பாடிணியாக, விறலியாக, அகவன் மகளாக என்று பல பாத்திரங்களாக மட்டுமல்லாது பாக்களைப் பாடும் கவித்துவம் நிரம்பப் பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர்.மேலும் கல்வி, வீரம், காதல், விளையாட்டு என அனைத்துத் துறையிலும் ஆர்வம் உள்ளவர்களாக,திறன் பெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பதனை சங்க இலக்கி யங்கள் கொண்டு ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரை.*

**திறவுச் சொற்கள்**

*மகளிர் மாண்பு–தொல்காப்பியர் காட்டும் மகளிர்ப் பண்புகள் –சங்ககால மகளிர் மரபுகள்–திறன் விளக்கம்–திறன் பற்றிய அறிஞர்களின் கருத்து–திறன்களின் வகைகள்– மகளிரின் பலவகைத்திறன்கள் எனும் சொற்களைக் கொண்டு அமைகின்றது.*

**முகவுரை**

*“பெண்” என்பவள் ஆண் சமுகத்தால் வருணித்து உரைக்கப்படும் கவர்ச்சிப் பொருளோ,போகப் பொருளோ, வியாபாரப் பொருளோ, வணிகப் பொருளோ அல்ல.அவள் பல்வேறு திறன்களைப் பெற்ற படைப்புகள் பலவற்றைப் படைக்கும் பேராற்றலைப் பெற்றவள்.படைத்து பலரோடும் பகிர்ந்து உண்ணும் பண்புப் பெற்றவள்.கணவன்,குழந்தை, குடும்பம் என அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஆவணப் பெட்டகம்.அவளின்றி அணுவும் அசையா என்பதற்கிணங்க கல்வி,வீரம், விளையாட்டு காதல், போர்க் குணம், புகழ்,கொடை, விருந்தோம்பல், பண்பு நலன், நிர்வாகத்திறன் என இவையனைத்தையும் தனது அணிகலண்களாக அணிந்து தம் நாட்டிற்காகவும் வீட்டிற்காகவும் செயல்படுபவள் என்பதற்கான இலக்கியப் பதிவுகளை இனி காணலாம்.*

**மகளிர் மாண்பு**

*“பெண்கள்” நாட்டிண் கண்கள். இதனால்தான் நாம் வாழும் நாட்டைத் தாய்நாடு என்றும், பிறந்த வீட்டை தாய்வீடு என்றும் கூறுகின்றோம். பெண்கள் இப்புவியனில் பிறந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் எண்ணற்ற பெருமைகள் பல சேர்த்துள்ளனர் என்பதனால் தான் ஓடுகின்ற ஆற்றின் பெயர்களைக் கூட காவிரி, கங்கா,யமுனா, சரஸ்வதி என்று பெண்களின்பெயர்களைச் சூட்டி மகிழ்கின்றோம்.இதிலிருந்தே புரிகின்றது எங்கும் பெண்கள் எதிலும் பெண்கள் என்ற நிலை.இதனால்தான் “மங்கையராக பிறப்பதற்கே நல் மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா”என்றான் கவிமணி.*

**திறன் – விளக்கம்**

*திறன் என்பது ஒரு செயலில் ஒருவருக்கு இருக்கும் திறமை அல்லது ஆற்றலைக் குறிக்கும் .இது புலன் (ஐம்புலன்)அல்லது மனம்(சிந்தித்தல்) சார்ந்த ஒன்றாகும்.திறன் – திறம், திறமை – திறமைசாலி. திறன் என்பது கல்வி,அனுபவம்,பயிற்சி மூலம் கற்றது."திறமை மற்றும் திறனைப் பிரிப்பது சிறந்து விளங்க முயற்சிக்கும் கனவுகளைக் கொண்ட,விஷயங்களைச் செய்ய விரும்பும் மக்களுக்கு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மிகப்பெரிய கருத்துகளில் ஒன்றாகும்.உங்களுக்கு இயல்பாக இருக்கும் திறமை, உங்கள் கைவினைப் பொருளை தயாரிக்கும் மணிநேரங்கள் மற்றும் உருவாகும் மணிநேரங்களால் மட்டுமே திறன் உருவாகிறது." திறமை, புலமை, ஆற்றல், வேலைத்திறன், கைத்திற, கலைத்திறன், பேச்சுத்திறன், படைப்புத்திறன் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.மேலும்,இதனை ஆங்கிலத்தில்* Talent, Ability, Capability, skil, power *1என்ற சொற்களால் வழங்கப் படுகின்றது.*

**திறன் பற்றிய – அறிஞர்கள் கருத்து**

*பெண்கள் மற்றும் மனித மேம்பாட்டில் மார்த்தா நுஸ்பாம் பின்வரும் சொற்களைப் பயன்படுத்தினார்,அதை அவர் தனது சமீபத்திய திறன் அணுகுமுறை புத்தகத்தில் மனித திறன்கள் என்பது "மக்கள் உண்மையில் என்ன செய்ய முடியும் மற்றும் இருக்க முடியும்".2 என்று குறிப்பிட்டுள்ளார்.மேலும்,*

*2.* https://en.wiktionary.org *– நுஸ்பாம் ,சொற்களஞ்சியம –.2000,5*

*திறன் – " ஒரு மனிதரின் இருப்புகள் மற்றும் செயல்பாடுகள்"*

*ஒரு நபரின் திறன் – ஒரு நபர் அடையக்கூடிய செயல்பாடுகளின் பல்வேறு சேர்க்கைகள் ஆகும்.*

*எனவே,திறன் என்பது ஒருசெயல்பாடுகளின் சேர்க்கைகளின் தொகுப்பாகும்.மேலும் இது ஒரு நபரின் ஒருவகையான வாழ்க்கை நடத்துவதற்கான சுதந்திரத்தை பிரதிபலிக்கிறது.3 என்று குறிப்பிட்டுள்ளார்.*

*3.* https://en.wiktionary.org *– சென் , சொற்களஞ்சியம் – 1992,40*

*எது திறன்?*

*திறன் என்பது வைத்திருப்பது,சேமிப்பது அல்லது இடமளிப்பதற்கான ஆற்றல் அல்லது பொருத்தம் என வரையறுக்கப்படுகிறது.இது ஒரு நபரின் மனரீதியாகவோ அல்லது ஊடல் ரீதியாகவோ ஏதாவது ஒன்றை சாதிக்கும் திறன் ஆகும்.4 என்கிறது பி.ஆர்.எம் நிறுவனம்.*

**திறன்களின் வகைகள்**

*1.செயல்பாட்டுத் திறன்கள் : செயல்பாட்டுத் தொடர்பான அறிவினைப் பெறுதல்.*

*2.மேலாண்மைத் திறன்கள்: திட்டமிடல், ஒழுங்கமைத்தல், அணித்திரட்டல், வளங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான அறிவுப் பெறுதல்.*

*3.மனிதத் திறன்கள் : மனித வளங்களை ஊக்குவிக்க ,பயன்படுத்த, மற்றும் மேம்படுத்த தேவையான அறிவினைப் பெறுதல்.*

*4.கருத்தியல் திறன்கள் : கண்ணுக்குத் தெரியாததைக் காட்சிப் படுத்துவதற்கான அறிவு,எதிர்கால வணிகத்தைத் திட்டமிட சிந்தனையைப் பயன்படுத்துதல்.*

*என்று திறன்களை நான்கு வகைகளாக டேனியல் காட்ஸ்5 வகைப்படுத்தியள்ளார்.*

**சங்ககால மகளிர் – அறிமுகம்**

*சங்க காலமகளிர் அழகாலும்குணத்தாலும் சிறந்திருந்தனர்.நீர் போன்ற சாயலும்,மயில் போன்றியலும் நறுமை தண்மை மென்மையாகிய இயல்பும் வர்ந்த மேனியும் இயற்கை மணமும் மாமைக் கவினும் உடையவர்களாக விளங்கினார்கள்.கூந்தல்குழல் முதலிய ஐவகை பகுப்பினை உடையது. இயற்கை மணம் கொண்ட கூந்தலிலே நெய்தல், குவளை,தாமரை போன்ற பலவகையான மலர்களை அணிந்து மகிழ்ந்துள்ளனர்.மேலும் காதில் குழையும், கையில் சங்கு வளையும், தோளில் தொடியும் அடியில் சிலம்பும் என பலவகையான அணிகலன்களை அணிந்துள்ளார்கள்.*

*அறிவினிலும் ஆன்ற புலமைத்துவம் பெற்ற சங்ககாலப் புலவரான ஔவையாரும் ஒருநாடு சிறக்க வேண்டுமானால் அந்த நாட்டில் உள்ள ஆடவரைத்தான் கூறியுள்ளார்.*

நாடா கொன்றோ காடா கொன்றோ
எவ்வழி நல்லவா் ஆடவா்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

*என்று பாடலடியில் கூறப்படும் ஆடவர் என்பது ஆண்களைக் குறிக்கின்றமையால் இங்கு பெண்களின் மாண்பு வெளிப்படுவதைக் கூர்ந்து நோக்க வேண்டும்.*

**தொல்காப்பியம் கூறும் மகளிர்**

*ஒரு பெண்ணின் பண்பு நலன் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் குறித்து தொல்காப்பியம் பின்வருமாறு எடுத்தியம்புகின்றது.*

அச்சமும் நாணமும் மடமையும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய வென்ப 5

*அச்சம் –பயம், நாணம் – அடக்கம்,மதிப்பு,பயபக்தி,மானம், தணிகை, மடம் – அரியாமை, அழகு,மென்மை, அறப்புறம்*

**பெண்மையின் பண்புகள்**

செறிவும் நிறைவும் செம்மையும் செய்யும்
அறிவும் அருமையும் பெண்பாலான ( தொல்.உரியி .32)

*செறிவு –அடக்கம்,நிறைவு – அமைதி,செம்மை – மனங்கோடமை ,செப்பு – சொல்லுதல்,அறிவு – துணிதல்,தேர்தல்அருமை – உள்ளத்தை அறிதல்.(5.அ) தொல்காப்பியர் கூறும் பெண்ணின் பெருமைகள் தொல்காப்பியத்தில் “மாதர்காதல்’ என்று சொல்வதாகக் குறிப்பிட்டுள்ளதால் மகளிர் காதலிப்பதர்க்கு , அன்பிற்கு உரியவர்கள் என்று பொருள்.*

**மகளிர் – பலவகைத் திறன்கள்**

*சங்காலத்தில் வாழ்ந்த மகளிர் ,அவரவர் தம் உடலுக்கும்,உள்ளத்திற்கும் ஏற்றதொரு திறன்களை வளர்த்துள்ளனர். அவற்றின் முறையே,*

*இல்லறக் கடனாற்றும் திறன் – கணவனைப் பேணுதல், விருந்து போற்றுதல், பொருளாதரத்தை ஈடுசெய்தல், நிலையறிந்து நடத்தியுள்ளாள் சங்கப்பெண்.*

*சமைக்கும் திறன் – செல்வந்தர் வீட்டில் பிறந்து உண்ணவும்,சமைக்கவும் தெரியாதப் பெண் இல்லற வாழ்வினை இனிதே ஏற்று சமைக்கும் திறனைப் பெற்றுள்ளாள் சங்கப் பெண்.*

*விளாயாட்டுத்திறன் – ஆயத்தாருடன் சேர்ந்து வண்டலயர்தல், பந்தாடல், ஊசலாடல் ஓரைஅயர்தல், புனலாடல்,அருவியாடல், சுனைநீராடரல் போன்றவற்றில் திறன் பெற்றுள்ளனர்.*

*கலைத்திறன் – ஆடல், பாடல், தூணங்கைக் கூத்து,குரவைக்கூத்து, கைவினைப் பொருட்கள், பொம்மைகள் செய்தல் , கண்ணிகள் தொடுத்தல் போன்றவற்றில், மணல்வீடு கட்டல் போன்ற திறன்களைப் பெற்றுள்ளனர்.*

*தொழில் திறன் – பூக்கொய்தல், ஆநிரை மேய்த்தல், மோர், தயிர், நெய் விற்றல், உணர்த்தல், உப்பு விற்றல், கைவினைப் பொருட்கள், பொம்மைகள் செய்தல், சலவை செய்தல் போன்றவற்றில் திறன் பெற்றுள்ளனர்.*

*இவ்வாறாக சங்க காலத்தில் வாழ்ந்த மகளிர் தன்னலம் கருதாது குடும்பத்திற்காக தான்தேய்ந்து தன் குடும்பத்தைத் தாங்கியுள்ளார்கள். எனவே மகளிர் படைக்கும் சக்தியாக மட்டுமல்லாது பாதுகாப்புப் பெட்டகமாகவும் இருந்துள்ளால்.குடும்பத்தின் அச்சாணியாக செயல்படும் தலைவனை தமது உயிராக கருதும் பாங்கு,பண்புநலன்,குடும்பத்தை நிர்வகிக்கும் திறன் போன்றவற்றை பல்வேறு சங்கப் பாக்கள் எடுத்துரைக்கின்றன.*

**தலைவனை உயிராகக் கருதும் பண்பு**

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் 6
நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே – சாரல் 7
இவள்
உயிர்த் தவச் சிறிது காமமோ பெரிது 8

*என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும் இத்தகைய பண்பு நலன்களோடும் மிகச் சிறந்த நிர்வாகத் திறனோடும் தலைவி இல்லறக் கடன் ஆற்றுவதால் தலைவன் தலைவி சொல்வதைக் கேட்டு நடக்கின்றான். இதனைகையும்*

காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவைப் போல 9

தலைவன் அவ்வாறு கேட்டு நடப்பதினால் மிகவும் அகம் மகிழும் தலைவி
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே 10

*இவ்வாறாக சங்க காலத் தலைவியானவள் வள்ளுவர் கூறும் அன்பும் அறனும் ஒருங்கே கொண்ட திறன் பெற்றவளாக இருந்துள்ளாள். மேலும்,இன்னுமொரு பாடலில் சங்க மகளிரின் சாதூர்யமான நிர்வாகத்திறன்வெளிப்படும் விதமாக, தலைவன் என்னை விட்டுப் பிரிந்ததை எண்ணிஇ நான் வருந்தவில்லை. அவர் இல்லற வாழ்வு கடனில்லாது, பிறர்தூற்றா வண்ணம் சிறக்க வேண்டுமானால் பொருள் அவசியம் . இருப்பதை அழிப்பது ஆணிற்கு அழகல்ல. வினையே ஆடவற்கு உயிர். அதனை ஈட்டவே அவர் சென்றுள்ளார். அவ்வாறு பொருள் ஈட்டி வந்தால் தான்*

உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார் 11 (குறுந்.283 )

அறவோர்க் அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர் கோடலும் 12

ஒழுகு நீர் நுணங்கு அறல்போல
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே 13

*எனும் போதனார் பாடலின் வழி சங்காலப் பெண் ஆன் புகுந்த இடத்திற் கேற்ப எவ்வாறு செயல்பட வேண்டும் எனும் நிர்வாகத் திறனை யாரிடம் இவள் கற்றாளோ என்று செவிலித்தாய் வியக்கும் வகையில் தனது குடும்பத்தின் பெருமையை பேணிபாதுகாக்கும் திறனைப் பெற்றுள்ளாள் சங்கால மகளிர்.*

**சமைக்கும் திறன்**

*சங்கப் பெண்கள் இல்வாழ்க்கையில் தன் கணவனைப் பேணுவதில் மிகவும் சிறப்புப் பெற்றுள்ளனர். இங்கே சமைக்கவே தெரியாதப் பெண் யாருடைய உதவியுமின்றி தானே நல்ல முற்றியத் தயிரை தன் காந்தள் போன்ற விரலினால் பிசைந்து தாளிதம் செய்து தன் கணவனுக்குப் பறிமாறுகின்றாள்.அவனும் இனி துஎன உண்ணுகின்றான்.இதனை,*

முளிஇதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக் 14

*என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.*

**விளாயாட்டுத் திறன்**

*சங்க காலத்தில் பேதை மகளிர் பந்தாடும் திறனைப் பெற்றுள்ளார்கள். இதனை*

பாலும் உண்ணால் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே
எளிதென உணர்ந்தனள் கொள்ளோ 15 குறுந்.396

**கலைத் திறன்**

*ஆயக் கலைகள் 64 என்பர் .அதில் குறிப்பிடத் தக்க கலைகளான ஆடல் கலை,பாடல் கலை , கூத்துக்கலை போன்றவற்றில் பெண்கள் அதிகம் ஈடபாடு காட்டியுள்ளார்கள் சங்ககாலமகளிர்கள். இதில் கூத்துக் கலைக் குறிப்பிடத்தக்கது.இது மகளிர் பல் கூடி ஆடும் ஒருவகைக் கூத்து.*

மள்ளர் குழீஇய விழவினானும்
மகளீர் தழீஇய துணங்கையானும் 16

**கைத்தொழில் திறன்**

*சங்க மகளிர் கோரைப் பாய்பின்னுதல், கூடை பின்னுதல், அலங்கார பொம்மைகள் செய்தல், கைவினைப் பொருட்கள் செய்தல் என பலவகைத் தொழில்கள் கைத்தொழிலில் உள்ளன.சங்க காலத்தில் பெண்கள் பூக்களில் உள்ள தாதுக்களைக் கொண்டு பொம்மைகள் செய்துள்ளனர்.*

**ஆய்வு முடிவு**

*இவ்வாறாக பெண்கள் பல்வேறு வகையான திறன்களைப் பெற்று மிகச்சிறப்பாக செயல்பட்டுள்ளனர். பெண்கள் இல்லை எனில் நாட்டிலும் சரி வீட்டிலும் சரி ஏதுமில்லை என்பது வெள்ளிடை..எனவே பாரதியின் கூற்றுப்படி பெண்ணைப் போற்றி ஆனந்த கூத்திடவோம். பெண்மைப் போற்றுவோம்! வாழ்க பெண்மை வளர்க நன்மை! நன்றி.*

1. https://en.wiktionary.org
2. https://socialsci.libretexts.org – நுஸ்பாம் ,சொற்களஞ்சியம் –.2000,5
3. https://en.wiktionary.org – சென் , சொற்களஞ்சியம் – 1992,40
4 . https://brm.instituterg
5. தொல்.களவு.8
5(அ). தொல்.உரியி .32
6. குறுந்.135
7. குறுந்.3
8. குறுந்.18
9. குறுந்.8
10. குறுந் .49
11. குறுந். 283
12. சிலம்பு.கொலைக்களக் காதை
13. நற்றிணை.110
14. குறுந் .167
15. குறுந்.396
16. குறுந். 31

**ஆய்விற்கு துணை நின்றவைகள்**

1. முதன்மை நூல் – குறுந்தொகை – டாக்டர் உ.வே.சா பதிப்பு,சென்னை –2009
2. இணையம்.
3. கழகத் தமிழ் அகராதி திருநெல்வலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
4. நற்றிணை, மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை –2014.